மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 01/2023

பெயர் – சுப்பாராஜன் (வா.சா.2)

நாள் – 20.11.2023

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் ஓ.மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் ஓ.மேட்டுப்பட்டி என்றால் சரிதான். ஓ.மேட்டுப்பட்டியில் வடக்கு தெரு, கிழக்கு தெரு என்று உள்ளது என்றால் சரிதான். மேற்கு தெருவும் உள்ளது. தேவர் சமுதாயத்தை சார்ந்தவர்கள் வடக்கு தெருவில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நாயக்கர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தெற்கு தெருவில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் பொன்ராஜ் என்பவர் தாக்கல் செய்துள்ளார். முருகன், ராஜேந்திரன், சுகுமார், ராஜேஸ்வரி, காங்கேஸ்வரி ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கை பொன்ராஜ் எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது தாயார் சொத்து அவருக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். பொன்ராஜ் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் பொன்ராஜீக்கு ஒரு தம்பி மட்டும் உண்டு வேறு யாரும் கிடையாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விபரம் முழுவதும் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. நான்குமால்கள் தெரியுமா என்றால் தெற்கு பக்கம் என்னுடைய இடம் உள்ளது அதுமட்டும் தான் தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக வேறுறொரு வழக்கு தாக்கல் பொன்ராஜ் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தபசில் சொத்து ஆதியில் முத்துலட்சுமிக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அவரது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியாது. குருசாமிதேவரின் இறப்பு பின்னிட்டு அவருடைய வாரிசுகள் தாவா சொத்தில் பாகம் பிரித்து கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் பாகம் பிரித்ததாக தெரியவில்லை. ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து அவர்கள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றாலும் வழக்கிற்காக தெரியவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அவர்கள் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை

ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி உத்தண்டனன் 4ம் பிரதிவாதி முருகனிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி உத்தண்டராஜ் 4ம் பிரதிவாதி முருகனிடம் கடன் வாங்கியருந்தார் என்றாலும் அவர் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாமல் போய் அதற்காக தபசில் சொத்தில் உள்ள தனது பாகத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொன்ராஜ் எந்த ஊரில் வேலை பார்த்து கொண்டிருந்தார் என்ற விபரத்தை எனது நிரூபண உறுதி கூற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். பொன்ராஜ் 2020, 2021, 2022 ஆகிய வருடங்களில் ஓ.மேட்டுபட்டியில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. 2022ம் ஆண்டில் தான் எங்கையோ இருந்து வந்து முருகனிடம் சண்டை போட்டார். பொன்ராஜ் வெளியூரில் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அவர் எந்த ஊரில் இருந்தார் என்று சொல்லியுள்ள நிலையில் பொன்ராஜ் 2022ம் ஆண்டில் முருகனிடம் சண்டை போட்டதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்ததை நான் பார்த்தேன். சண்டை நடந்ததற்காக புகார் கொடுக்கப்பட்டதா என்றால் முருகன், பொன்ராஜ் மீது புகார் கொடுத்தார். தபசில் சொத்தை ராஜேந்திரன் மற்றும் சுகுமார் ஆகியோர்கள் கங்கேஸ்வரி மற்றும் முருகனுக்கு கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 04.12.2002 தபசில் சொத்தின் வடபகுதியினை மாரியம்மாளின் மகள்களான மகாலட்சுமி, மாரியம்மாள் ஆகியோர்கள் முருகன் அவருடைய சகோதர் செல்லதுரை ஆகியோர்களுக்கு தபசில் சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. முருகன் மற்றும் செல்லத்துரை அந்த சொத்தை கிரையம் பெற்று அதில் வீடும், கடையும் கட்டினார்கள் என்றால் கடையை முதலிலேயே கட்டிவிட்டார்கள். தற்போது வீட்டை கட்டினார்கள். அவ்வாறு கட்டிய வீட்டிற்கு முன்பாக தான் கடை உள்ளது என்றால் சரிதான். பொன்ராஜ் முருகனிடம் சண்டை போட்டதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் பொன்ராஜ் முருகனிடம் சண்டை போடவில்லை என்றாலும் சரியல்ல. பொன்ராஜ் என்னிடம் கடன் வாங்கியுள்ளார் என்றாலும் அந்த கடனை திரும்ப செலுத்த வேண்டும் என்பதற்காக நான் பொன்ராஜக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொன்ராஜ் கடன் வாங்கியுள்ளது உண்மை என்றால் சரியல்ல. முருகன் எத்தனை

ஆண்டு காலமாக கடை வைத்துள்ளார் என்றால் பத்து, பதினைந்து ஆண்டு காலமாக வைத்துள்ளார். குருசாமிக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்கள் சம்பந்தமாக ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றாலும் அதனை தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை.

6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி

குருசாமியின் மனைவி முத்துலட்சுமி எப்போது இறந்தார் என்றால் 1990ம் ஆண்டு வாக்கில் இறந்திருப்பார். முத்துலட்சுமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் பொன்ராஜ் மற்றும் உத்தண்டராஜ் ஆகியோர்கள் வாரிசு ஆவார்கள். வாதி பொன்ராஜ் கேட்டதால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். முத்துலட்சுமியின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகளுக்கு எப்போது கிரையம் கொடுத்தார் என்றும் எந்த சொத்துக்களை கிரையம் கொடுத்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் சரியாக இருந்தால் மட்டுமே சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். தபசில் சொத்திற்கான கிரைய பத்திரமும் ஆவணங்கள் சரியாக இருந்ததால் தான் பதிவு செய்யப்பட்டது என்றாலும் அதுபற்றி தெரியாது. தபசில் சொத்திற்கான சரியான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டதால் அரசு மதிப்பு வழிகாட்டுதலின் படி கிரைய பத்திரத்தை 6, 7 பிரதிவாதிகள் பதிவு செய்துள்ளார்கள் என்றாலும் 6, 7 பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தெரியாது. வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கு 6, 7 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.